# கோபிநாதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"
- தமிழ்மறை-



# 45ம் நாள் நினைவாக ....

# கோபி நாதம்

30.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302 - 388

# அறிமுகக் குறிப்பு

இது ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்

பாசமுள்ள மகனுக்காக,

பொறுப்பான சகோதரனுக்காக,

நல்ல மாணவனுக்காக,

தூய நட்புள்ள நண்பனுக்காக,

சுயநலமற்ற சமூகசேவகனுக்காக,

திறமையுள்ள விளையாட்டு வீரனுக்காக,

துடிப்புள்ள இளைஞனுகாக,

எழுதப்பட்ட வரலாற்று

ஆவணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுறு மதியை அடைந்தது உன் வதனம்

மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி!

கானுறு புலியை அடைந்ததுன் வீரம்

கற்பகம் அடைந்ததுன் கரங்கள்!

தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்

செந்தழல் அடைந்ததுன் தேகம்

யானும் என் கலியும் எவ்விடம் புகுவோம்

நந்தியே நந்தையாபரனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- கோபி பதித்து சென்ற சுவடுகள்
- தென்கரவையூர் ஸ்ரீ முங்கோடை முருகன் ஆலய பரிபாலனசபையினர்
- உதிர்ந்த மலர்கள்
- கோபிநாத் ஒரு வரலாறு ....
- நண்பனைத் தின்றன பிசாசு
- கோபி... என்ற என் கோபிநாத்திற்கு ....!
- பிரியமானவர்களில் இருந்து பிரிவது துக்கமானது
- தோழிகளின் புலம்பல் ....
- மீண்டும் வாராயோ....?
- யாழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊழியரும் எமது சக உத்தியோகத்தருமாகிய வாரி.செல்வநாயகம் அவர்களின் புத்திரன் கோபிநாத் அவர்களின் சிவபதப்பேறு குறித்த இரங்கல்
- காலத்தால் அழியாத சேவைகள் செய்த இளம் தலைவர் கோபிநாத்
- விக்னேஸ்வரம் வளர்த்த கோபிநாத் அவர்கட்கு விக்னேஸ்வரத்தின் அஞ்சலி
- கோபியும் நானும் ....
- தென்கரவை திருவள்ளுவர் விளையாட்டுக்கழக உறுப்பினர் செல்வன் செ.கோபிநாத் அவர்களின் திடீர் மறைவு குறித்த நினைவுகள்
- கோபி ஓர் கலங்கரை விளக்கு
- 45ம் நாள் நினைவஞ்சலி
- கோபியின் நினைவுகள் கோலமிடும் நெஞ்சினிலே .....
- கோபி எனும் கோபுரம்
- "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"
- மறக்கமுடியாத மரணத்தின் நினைவுகளில் ...
- உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு
- வருந்துகின்றோம்!!!
- உறவாகி உயிராகி வானாகினாய் ....
- ஈடு செய்ய முடியாத இழப்பு
- தாயுமானவன்
- எம் உடன்பிறந்தவனே!
- கரவை மைந்தன்
- காகிதத்தில் எழுத முடியாத காவிய நாயகன் ...
- எம் உள்ளத்தில் என்றும் உன் நினைவுகள் ...
- துயில் கொள்ளப்போனதேனோ
- என்றும் எம் விடிவெள்ளி
- ஏன் எனை மறந்தாய்?
- கண்மணியே வந்துவிடு ....
- நிழலாய் நிற்பாய்
- என்றும் என் வழிகாட்டி ...
- தலவிருட்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
26 . 11 . 1988

மறைவு
13 . 12 . 2011

அமரர்

# செல்வநாயகம் கோபிநாத்

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு கர வருட கார்த்திகை திங்களின்
பூண்ட அபரபக்க சேர் திருதி(யை) மண் விட்டு
விண் சென்ற கோபிநாத் பந்தமிலான் தாழ்இணை
கண்டுகளித்த திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபி பதித்து சென்ற சுவடுகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்கையிலே
தன்நிகரில்லாத்தலை நகர் யாழ்ப்பாணத்தில்
கல்வியில் சிறப்புடைய கரவை எனும் ஊரில்
செவல்வநாயகம் சறோஜா தம்பதியரின்
செல்வத்திருமகனாய் 26.11.1988 ஆம் ஆண்டு
அவனியிலே அவதரித்தான் கோபிநாத்.
இரண்டு சகோதரிகளுக்கும் அண்ணனுக்கும் இளையவனாய்
மூன்று தங்கையருக்கு முதல்வனாய்
நான்காவது பிள்ளையாய் நானிலத்தில்
வந்துதித்தான்.

உறவுகளுடன் இவன் குழந்தைப்பருவம்
உல்லாசமாகக் கழிந்தது.
ஆறாவது வயதினிலே ஆரம்பக் கல்விகற்க
விநாயகர்வித்தியாலயம் சென்றான்.
கல்வியிலும் கலையிலும் விளையாட்டுக்களிலும்
வித்தகனாய் திகழ்ந்து வந்தான்.
ஆறாம் ஆண்டுதனில் அடி எடுத்து வைத்தான்
விக்னேவராக் கல்லூரியில்.
உயர்தரம் முடியும் வரை ஓர்
உன்னதமான மாணவனாய்,
ஆசிரியர்களுக்கு அன்புடன் பணிவும் காடடுபவனாய்
தன் சக மாணவர்களுக்கு இனிய நண்பனாய்,
விளையாட்டில் சிறந்த வீரனாய்,
நாடகத்துறையின் நனி சிறந்த நடிகனாய்
பரதநாட்டியத்தை பயிலாமல்
பார்த்துவிட்டு மேடை ஏறிய கலைஞனாய்,
பாடசாலை விழாக்களை முன்நின்று நாடாத்தும்
செயல் வீரனாய்,
சிறந்த மாணவத் தலைவனாய்,
பாடசாலை வாழ்வில்
பல்துறையில் மிளிர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் தரப்பரீட்சையின் பின்
உயர் கல்வி கற்பதற்காய்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுதுறை மாணவனானான்
ஓங்கி உயர்ந்த உடல் அமைப்பும்
ஓயாத செயல் துடிப்பும் உடையவனாய்
விளையாட்டுத் துறையில் வீறுநடை போட்டான்.
திருவள்ளுவர் விளையாட்டுத் துறையின்
திறமையான வீரனாய்,
பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த
பயிற்றுவிப்பாளனாய்,
சக வீரர்களை வழிநடத்தும் விளையாட்டு வீரனாய்
தான் கற்ற கல்வியை தலைநிறுத்தி வாழ்ந்தான்.

இந்த வேளையிலே
தேசிய இளைஞர் சேவை மன்றில் இணைந்து
தேசத்திற்காய் சேவை செய்யும் இளைஞனாய்
இனம் கடந்து, மொழி கடந்து
மதம் கடந்து, உறவு சேர்த்தான்
கண்டி, காலி, மாத்தறை, நெடுந்தீவு, அம்பாறை,
அம்பலாங்கொடை போன்ற இடங்கள் சென்று
தேசிய இளைஞர் உறவுப் பாலத்தை விரிவடையச் செய்தான்.

இதன் மூலமாக இலங்கையில்
எத்தனையோ இடங்களிலெல்லாம்
தனக்கென உறவுகளைத் தேடிக்கொண்டான்.
தன்போல் எல்லோரையும் நேசிக்கும்
தன்மையை தனக்கே உரித்தான
தனித்தன்மையாயக் கொண்டதனால்
உறவுகளுக்கு வருந்துயரத்தை தன் தலைமேல் சுமப்பான்
உற்ற நண்பர்கள் நண்பிகளின் உயர்விற்காக உழைப்பான்
இதனால்
ஊரெல்லாம் இவனுக்கு உறவுகள் ஆயிரம்

வீட்டினர்க்கு இவனோர் விலைமதிக்க முடியாத செல்வம்.
தாய் தந்தையரை தன் கண்கள் எனக் காப்பான்
சகோதரிகளின் உயர்வே தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாய கடமை என்பான்.
அண்ணன் மார்கள் முன் இவனோர்
அடக்கமான ஆண் மகன்.
தம்பிமார்களின் தானைத் தலைவன்
சித்தி சித்ததப்பா மாரின் சீரினைப் பார்ப்பான்
மாமி மாமாமாரிற்கு மாண்புமிகு மருமகனாவான்
மச்சான் மச்சாள் மாருடன்
மரியாதை காட்டி நடப்பான்
பேரர் பேத்திகளிடம் பேரன்புகாட்டி நிற்பான்.

இவ்வாறாக மானிடத்தின் மகத்தான தன்மைக்கு
இலக்கணமாக வாழ்ந்து காட்டி
தனது 23 ஆவது பிறந்தநாளை
26.11.2011 காலி மாவட்டத்தின் கிக்கடுவ பிரதேசத்தில்
அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள்,
தன் சக நண்பர்கள் பல இன, மொழி, மத மக்களுடனும்
இணைந்து கொண்டாடி
மானிடத்தின் சமதர்மத்தை நிலைநாட்டி,
மானிடனாய் தான் இருந்து ஆற்றவேண்டிய
கடமைகளை யெல்லாம் செய்து முடித்து
பல்கலைக்கழக மாணவனாய்,
துடிப்புள்ள இளைஞனாய்
எல்லோர் மனதிலும் நிறைந்து
நல்ல மனிதத்தின் சுவடுகளை
இவ்வுலகில் பதித்து விட்டு சென்றுவிட்டான்......

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கரவையூர் ஸ்ரீ முங்கோடை முருகன் ஆலய பரிபாலனசபையினர்

உலராத துணி உடுத்தி தினமும் உன்றன்
திருத்தலம் தொழுது பெற்ற முத்தமிழோன்
பலராலும் குட்டி என்று செல்லமாக
பரிவுடனே அழைத்து வந்த கோபிநாத்
சிலகாலம் மட்டுமே புவியில் வாழ்ந்து
சிறகொடிந்த பறவைபோல் - எமையாக்கி
மலராத மொட்டெடுத்து மாலை சூட
மனங்கொண்டாயோ முங்கோடை முருகா என
புலர்கின்ற பொழுதினிலே புவியைவிட்ட
புனிதனை சரவணப்பொய்கையில் நீராட்டி
விலையில்லா உன் திருத்தலம் சேர்ப்பாய் என
விண்ணுலகில் உன்னடியில் அடைக சாந்தி....!

முல்லை மலர் வாசம் தர மறுக்கிறதே அதை
முகர்ந்து விட எம் மனமோ துடிக்கிறதே
கல்லிலுமோ நீரிங்கு கசிகிறதே தென்கரவை
கண்களிலே கண்ணீரும் பனிக்கிறதே
எல்லாமே கற்பனையாய் மாற்றி எம்மை
ஏகாந்தப் பேரிருளில் விட்டகல
வல்லவனாய் எம்மை விட்டு செல்லும் காலை நடு
வழியிலே வார்த்தையேதும் கூறா வண்ணம்
எல்லோரும்துயர் கடலில் மூழ்க வைத்து
எமன் உன்னை அழைத்தானோ எங்கள் தெய்வம்
வல்லவனாய் முங்கோடை வாழும் வேலா
வானுலகில் தாளடியில் சேர்ந்தருள்க சாந்தி

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

முங்கோடை முருகன்
பரிபாலன சபையினர்
கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த மலர்கள்

கரவை விக்னேஸ்வரக் கல்லூரியாம் நந்தவனம் காலந் தோறும் புதுப்புது மலர்களை மலர்வித்து கல்வி உலகில் மணம் பரப்பி வருகின்றது. அம் மலர்களோ காலத்தால் அழியாத புதுமை படைத்து கல்லூரித்தாயை பெருமைப்படுத்துகின்றன. மண்ணுலகில் மகத்தானவையாக பாராட்டப்படுகின்றன. காலத்தின் கோலத்தால் கல்லூரிமாதாவின் மடியில் தவழ்ந்து விளையாடி விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த கோபிநாத் எனும் ஓர் அரும்பு மலராக பல்கலைக்கழகம் சென்றபோது கல்லூரிச்சமூகம் மகிழ்ந்தது. இன்பத்தின் எல்லை துன்பம் என்பதுபோல் பேரிடியாய் வந்தது கோபிநாத் அகால மரணமானான் எனும்செய்தி. சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தது எம் கல்லூரி. கரவை மண்ணின் மைந்தனாய், கல்லூரி மாதாவின் புகழ்பூத்த புதல்வனாய் சாதனைப்படிகளில் காலடி பதித்தவேளை கொடுமை மிக்க காலனவன் பாசக்கயிறு இந்தப்பாசமலரைப் பறித்துவிட்டது. தாங்கொணாத் துயரத்தால் கல்லூரிமாதா கண்ணீர்வடித்தாள். கல்லூரிச்சமூகம் கலங்கித் தவித்தது.

தம்குடும்ப விளக்குகளாம் புத்திரச்செல்வங்கள் யாவரையும் எம் கல்லூரிக்கு வளமாகத்தந்து கல்வி உயர்வில் அவர்தம் வளர்ச்சிகண்டு மகிழ்ந்த குடும்பத்தினர் துயரத்திலே நாமும் இணைகின்றோம் எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின் றோம். எம் அன்பு மாணவனின் பூதவுடல்தான் மறைந்தது ஆனால் அவன் புகழுடம்போ கரவை மண்ணைவிட்டோ எம் மனங்களை விட்டோ மறையாது. கோபிநாத்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள்கூட்டமோ......

தக்கார் தகவிலார் என்பது அவர்தம்
எச்சத்தால் பெறப்படும்.

எனும் வள்ளுவர்வாக்கை உலகிற்கு நிரூபித்தது. எனினும் மாண்டவர் மீண்டும் வருவதில்லை எனும் முன்னோர் வாக்கினை உணர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**விக்னேஸ்வரக் கல்விச்சமூகம்.**
**கரவெட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபிநாத் ஒரு வரலாறு ....

எமது செயலக உத்தியோகத்தர் திரு.செல்வநாயகம் அவர்களுடைய அன்பு மகன் அமரர் கோபிநாத் ஒரு வரலாறு. அவன் சிறுவயதில் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவனது ஒவ்வொரு செயல்களும் என்றும் நினைவைவிட்டு அகலாதவை.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானபீட மாணவ னாகிய இவனுக்கு விளையாட்டுத்துறையில் தனியிடம் உண்டு. ஒரு நிகழ்வில் இவன் இல்லை என்றால் அது பெரிய வெற்றிட மாகவே இருக்கும். சக மாணவர்களின் அன்பையும் பாசத்தையும் பெற்றவன். சிறந்த வெற்றியாளன். இன ஒற்றுமைக்காக இளைஞர் சேவை மன்றத்தினூடாக தெற்குக்கு பயணித்து அம்மக்களின் அபிமானியாகியவன்.

விளையாட்டு விஞ்ஞானபீட மாணவனாக இருந்தாலும் பல்கலையிலும் நாட்டம் மிக்கவனாக திகழ்ந்தான். கலைகளில் நாடகத்துறையில் தனது கணிசமான பங்களிப்பை வழங்கினான். இனசனங்களுக்கு உதவுவதிலும் சமூகத் தொண்டுகள் புரிவதிலும் இளைஞர்களுக்கு ஓர் முன்னுதாரணமாக விளங்கினான்.

இவன் இழப்பை யாரால் தாங்கிக் கொள்ள முடியும். நல்லவர்களை இறைவன் விரைவில் அழைத்து விடுவான். மனம் அமைதி கொள்வோம். இவன் ஆத்மா இறைவனுடன் ஒன்றாகக் கலக்க பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ.வரதீஸ்வரன்**
**பிரதேச செயலாளர்**
**கரவெட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனைத் தின்றன பிசாசு

உனக்கான கனவுகள் - நமது
விழிகளுக்குள் கல்லறையாகி விட்டது
அநாதையாகி நிற்கும் உனது உறவுகளில்
நாமும் ஒருவராகி விட்டோம்
நண்பர்கள் வட்டத்தில் நீ ஒரு நட்சத்திரம் - இப்போது
உன்னை நாம் வானத்தில்தான் தேடி வருகின்றோம்
எல்லோரிடத்திலும் நீ பிரியமாய் இருந்தாய்
உன்னில் பிரியப்பட்டது பிசாசு
நீ ஆவியாகி விடவில்லை - எமது
கண்களில் கண்ணீராய் வழிந்துகொண்டிருக்கிறாய்
இறந்தவர்கள் உயிர்ப்பார்கள் ஆனால்- முதலில்
நீதான் உயிர்ப்படைவாய் - நண்பா

**நெடுந்தீவு முகிலன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபி... என்ற என் கோபிநாத்திற்கு ....!

மீண்டும் சில பூபாளம்
மீண்டும் சில உதயங்கள்
மீண்டும் சில உலகங்கள்
வந்தாலும் உன்னைப்போல் இனி ஒருவன் எப்படி....?

என் மருத்துவ மூளை ஒரு கணம்
சிந்திக்க மறுத்தது.
ஆண்டவனின் நீதி சபையிலும்
மரணத்தின் அகராதியிலும் சில
பலவீனங்கள் காணப்பட்டதை நான்
உணர்கிறேன் உன் மரணத்தின் பின்.
ஒரு வேளை எல்லோருக்கும் நல்லவனாக
இருக்கும் ஒருவனை இறைவன்
இப்பூமியில் இருந்து எடுத்துவிடுவானோ......?

என் கரவெட்டிப் பிரதேசத்தில் உன்னோடு அறிமுகமாகி பழகியகாலம் மிக சொற்பம் ஆனாலும் என் உறவுகள் மூலம் நான் உணர்ந்தவை மிகவும் அதிகம்.
கோபி ஓர் இனிய தம்பி/அண்ணன்
கோபி ஓர் இனிய நண்பன்
கோபி ஓர் இனிய காப்பாளன்
கோபி ஓர் இனிய கடமையாளன்
கோபி ஓர் நல்ல மாணவன் /கெட்டிக்காரன்
கோபி ஓர் நல்ல சகோதரன்
கோபி ஓர் நல்ல விளையாட்டு வீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி... நீ வாழ்க்கையின் ஒவ்வொரு படிமுறைகளிலும் சாதனை செய்துள்ளாய். O/L, A/L,University என்று ஒரு தடவைகளில் தங்குதடையின்றி கல்விப்பாதையில் சென்றுள்ளாய். அதே போன்று உன் வாலிபவயதில் என் அறிவிற்கு தெரிந்த வகையில் ஒழுக்கத்தின் குறிகாட்டியாக வாழ்ந்துள்ளாய். நாடளாவிலும் நண்பர்களைச் சேர்த்து நல்ல நட்பாளனாகவும், பண்பாளனாகவும் உன்னை நிருபித்துள்ளாய். சிறுமை கண்டு சீறும் சீரிய வீரானாக பொறுமையுடன் சாதிக்கும் பேராளனாக கரவெட்டி மக்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கே உன்னை அடையாளப்படுத்தி யுள்ளாய். எம் கரவெட்டி பிரதேசத்து வயது வந்தவர்களுக்குகூட நீர் விருப்பத்திற்குரிய பேரப்பிள்ளை. உன்னை வெறுப்பவர் உண்மையில் மனிதர் இல்லை அப்படி இங்கு யாருமில்லை. உன்னை நேசிப்பவர் மானிடத்திற்குத் தகுதி பெற்றவராவார். 21 ஆம் நூற்றாண்டில் ஓர் வாலிபன் எப்படி நாட்டிற்கும் வீட்டிற்குமாக வாழவேண்டும் என்று வாழ்ந்துகாட்டினாய். உன் மரணத்தில் கூட மனிதசமூகத்திற்கு படிப்பினை புகட்டி சென்றாய். புகழோடு வாழ்ந்து புகழோடு மறைந்த கோபி... உன் ஆத்மா இறைவனடி நிழலில் இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Dr. K.Sivaraman
MBBS(Col), MD (Col), MRCP (UK)

Consultant Physicaian
Base Hospital,Point Pedro.

**K.சிவராமன்**
**பொதுவைத்திய நிபுணர்**
**ஆதார வைத்தியசாலை**
**பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## පියෙහි විප්පයෝගෝ දුක්ඛා
## ප්‍රියයන්ගෙන් වෙන්වීම දුකකි !

අපි මේ සංසාරේ මහ දුරක් ගෙවාගෙන මේ දරණී තලයේ මිනිසුන් ලෙසට උපන්නෙමු. ඒ උපන් අය විවිධ බෙදීම් වලට සීමා මායිම් වලට සීමා කර ඇත. එම සියලු බැඳීම් මා මෙහිදී විස්තර නොකරන්නෙමු. මොකද අපි එකම මිනිස් පවුලක් නිසා මේ බැඳීම් ඉවත දැමිය යුතු කාලය එළඹ ඇති නිසා අපි එයට හැඩ ගැසී ඇත්තෙමු.

මේ කථාව මෙලෙස දිග හැරුනේ එක් කාරණයක් කියන්නටය. වසර 30 ක් තිස්සේ මේ රට බෙදීමට ලක්වී තිබුණු බව නොරහසකි. එම සීමා මායිම් ඉවත්වී වසර 02 ක් ගත වන්නටත් පෙර එනම් 2011 නොවැම්බර් මස 25 සිට දෙසැ. 01 දක්වා උතුරේ වැසියන් 50 ක් දකුණේ අපේ ගමට පැමිණියේය. එම පැමිණි අය ඉතා සුහදශීලි හා මිත්‍රශීලි අය වූහ. ඒ අය ලඟ මිනිසත් බව කාරුණික බව ලෙන්ගතු බව ඉතා ඉහළින් තිබුණේය. ඒ අය සමඟ අපි ඉතා ඉක්මනින් සුහද වීමු. ඒ අය සමග ඇති වූ මේ බැඳීම තවත් තීව්‍ර වූයේ 2011.12.04 - 11 යන දිනයන් හි අපි යාපනයේ කල සංචාරය හේතුවෙනි ඔවුන් අපි ඉතා සුහද ලෙස යහළුවන් මිත්‍රයන් ඥාතීන් ලෙස පිළිගත්තේය. එයින් ඇති වූ බැඳීම ඉතා ශක්තිමත්ය. අපි යාපනේ සිට නැවත හික්කඩුවට පැමිණ ගතවූයේ දින 03 කි. අප සමඟ කතා කළ, අපි සමග එකට එක්ව කටයුතු කළ අපේම සහෝදර **ගෝබි** නමැති කලන මිතුරාගේ හදිසි වියෝව කණ වැකුණේ මහ විශාල හෙණයක් ගසන්නාක් බඳුවය. අප මුළු ගමම සොවින් බරවී ගියහ. අපේ සිංහල සහෝදරයින් මෙම දමිළ සහෝදරයාගේ වෙන්වීම ගැන මහත් සේ කනගාටු වූයේය.

අපි දනිමු ප්‍රියයන්ගෙන් වෙන්වීම දුකක් බව, ලොවේ සියල්ල අනියත බව. එහෙත් එකවරම බැඳුනු බැඳීමක් හදිසියේම වෙන් වී යනු දැකීමට අපි අකමැත්තෙමු. **ගෝබි** හොඳ තරුණයෙකි. හොඳ ගති ගුණ වලින් පිරී ඇති අයෙකි. ප්‍රියශීලිය, මිත්‍රශීලිය, නිහතමානීය, අවංකය. තරුණයන් අතර හොඳ තරුණයෙකි. මේ අත්බවේ අපට එක මවගේ දරුවන් වීමට නොහැකි වූයේය. ලබන අත් බවේ අපි පතමු එකට ඉපදීමට එකට කටයුතු කිරීමට.

**ගෝබි** සසරෙදී ඔබ නිවන් දකීවා....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එක් වී සිටි නිසා හිතවත් කම — බන්දා
ඔබගේ වියෝවෙන් සැම දෙන ඉකි — බින්දා
ඉපදුම සමග මරණය ගෙන එන — හින්දා
සැනසෙමු මදක් නෙත දුක් කඳුලැලි — රන්දා

ඉඩලත් විටදි පාමින් බණ දමට — හිත
ඔබකළ හොඳක් මිස නොහොඳක් මතක — නැත
කළ ඒ පිං බලෙන් පාමින් කුළුණු — මෙත
ගෝබි ඔබට අත්වෙයි අම නිවන් — සෙත

ගාල්ල දිස්ත්‍රික් යොවුන් පාර්ලිමේන්තු මන්ත්‍රිනි,
ඩී. රුවිනි ද සොයිසා
ඉඩමීතොට
මාදම්පාගම
අම්බලන්ගොඩ.

මාදුවේ උපනන්ද හිමි
විහාරාධිපති,
සුවිසුද්ධාරාමය
ඉඩමීතොට
මාදම්පාගම.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியமானவர்களில் இருந்து பிரிவது துக்கமானது

நாங்கள் இந்த உலகிலேயே பெரிய தூரங்கடந்து இந்த பூமியிலே மனிதராகப்பிறக்கின்றோம். இவ்வாறு பிறந்த நாம் வெவ்வேறாகப் பிரிந்து வெவ்வேறு கட்டுப்பாட்டில் இருக்கின்றோம். அவ்வாறான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நான் விபரிக்கவில்லை நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம் என்றபடியால் இந்தக் கட்டுப் பாட்டை வெளிப்படுத்த வேண்டிய காலம் வந்துள்ளதால் அதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இந்தக் கதையை நான் கூறுவதற்கு காரணமொன்று உண்டு 30 ஆண்டுகளாக இந்த நாடு பிரிந்திருந்தது ஒன்றும் இரகசியமல்ல இப்பொழுது நாம் எல்லோருடனும் கலந்து வாழத் தொடங்கி 2 வருடங்கள் கழிவதற்கு முன்பு அதாவது 2011 கார்த்திகை 25ம் திகதியிலிருந்து மார்கழி 01ம் திகதி வரை வடக்கு வாசிகள் 50 பேர் தெற்கிலே எங்களுடைய ஊருக்கு வந்தனர். அவர்கள் எல்லோருடனும் நாம் அன்பாகவும் சகோதரத்து வமுடனும் பழகினோம். அவர்களிடம் நட்பு, கருணை, அன்பு மிகுந்து இருந்தது அவர்கள் எங்களிடம் மிகுந்த அன்புகாட்டினர். இதனால் எமது நட்பு மிகவும் தீவிரமானது.

2011.12.04- தொடக்கம் 2011.12.11 வரை நாம் யாழ்ப்பாணம் வந்தபோது அவர்கள் எங்களை மிகுந்த நட்புடன் நண்பர்களாக, உறவினர்களாக வரவேற்று உபசரித்தனர். இதன் மூலம் எங்களுக்கும் அவர்களுக்குமான உறவு மிகுந்த பலம் வாய்ந்ததாக இருந்தது. யாழ்.மாவட்டத்தில் இருந்து கிக்கடுவ பிரதேசம் வந்து 3 நாள்கள்தான் எங்களுடன் அன்பாகபபழகி சேர்ந்திருந்து எங்களுடன் ஒத்துழைத்த எங்கள் சகோதரன் கோபியின் மரணச்செய்தி காதில் கேட்டது பேரிடி விழுந்தாற்போல் இருந்தது. எங்கள் மொத்தக்கிராமமும் சோகத்தில் மூழ்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சிங்களச் சகோதரர்கள் இந்தத் தமிழ் சகோதரனின் பிரிவால் பெரிதும் துக்கமடைந்தனர்.

நாங்கள் அறிவோம் பிரியமானவர்களின் பிரிவு மிகவும் துக்கமானது என்றும், உலகில் அத்தனையும் நிஜம் இல்லை என்றும் ஆனால் எமக்குகிடைத்த அவரின் அன்பு திடீரென்று விலகிப் போனதும் அப்பிரிவை நாம் ஏற்கவில்லை.

கோபி நல்ல குணம் நிறைந்தவர் நல்ல இரக்கமுள்ளவர் அடக்கமானவர் வஞ்சமில்லாதவர் பொதுவான இளைஞர்களுடன் ஒப்பிடும்போது நல்லவர். அவரை இன்றும் பார்க்கவேண்டும்போல் ஆசையாக இருக்கிறது. இந்த ஜென்மத்தில் ஒரு தாய் பிள்ளை யாக நாம் அவருடன் பழக கிடைக்கவில்லை ஆனாலும் அடுத்த ஜென்மத்திலாவது நாம் அவருடன் பிறப்பதற்கு பிரார்த்தனை செய்வோம்.

கோபி.....
நாங்கள் அன்புப் பிணைப்பால் சேர்ந்திருந்தோம்
உன்னுடைய பிரிவினால் எல்லோரும் ஏங்கினோம்!
பிறப்பு ஒன்று வரும்போது மரணம் நிச்சயமாகிறது-என்று
நாம் கண்ணில் கண்ணீருடன் கொஞ்சம் சமாதானமாகிவிட்டோம்
கிடைத்த சந்தர்ப்பத்தில் எல்லாம் தர்மத்திற்கு அன்பு செய்தாய்
நீ நல்லதுதான் செய்தாய்
கெட்டது செய்ததாய் என்று நாம் அறியவேயில்லை
நீ செய்த புண்ணியத்தால் கோபி உனக்கு
சொர்க்கத்தில் ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும்.

**காலி மாவட்ட இளைஞர் பாராளுமன்றமந்திரி**
**பீ. ருபினி த சொய்ஷா**
**இடத்தொட்ட**
**மாதம் பாகம**
**அம்பலாங்கொட.**

**மாதுவே உப்பன்னந்த கிமி**
**விஷாராயிபதி**
**சுபிசுத்யா ராமய**
**இடம்தொட்ட**
**மாதம் பாகம.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிகளின் புலம்பல் ....

எங்கள் இதயங்களின் துடிப்போசையில்
நிரந்தரமாய் அமர்ந்துவிட்ட ஆருயிர்த் தோழனே!
மைதானச் சுவடுகளில் எம் கால்களுடன்
உன் நினைவுகளும் கூடவே நடக்கிதடா!

வகுப்பறையில் தினமும் உன் முகம்காணாமல்
உன் குரல் கேளாமல் நாம் படும் வேதனை......
உனக்கு தெரியவில்லையா? மற்றய மாணவர்கள்
சண்டையிடும்போது நீ மட்டும் தானடா
எங்கள் பக்கம் நின்று எமக்காய் கதைப்பவன்.

எங்கு சென்றாலும் காவல் அரனாய் எமக்கு துணைநின்று
கலகலத்த பேச்சாலே எமைக்களிப் பூட்டியவனே!
இன்று நீ இல்லாமல் எம்மிடம் அமைதி குடிகாண்டு விட்டதடா!
காலனின் கால்களில் மண்டி இட்டு
கண்களில் கண்ணீரல்ல இரத்தம் சிந்தக்
கதறி அழுகின்றோம் மீண்டும் எம் தோழனை
எம்மோடு கைகோர்க்க அனுப்பமாட்டாயயோ என்று!

**உன் பிரிவால் துயருறும்**
**2ஆம் வருட விளையாட்டு**
**விஞ்ஞான அலகு தோழிகள்**
**(யாழ்/பல்கலைக்கழகம்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வாராயோ....?

ஒரு தாய் வயிற்றில் பிறக்கவில்லை -ஆனால்
ஓர் சொந்தம் ஆனோம்
மரக்கிளையில் கூடு கட்டி வாழும் குருவிபோல்
ஒரு கூட்டில் வாழ்ந்தோம்.
எனக்கு அன்பை ஊட்டிய அன்பு அண்ணா
நீங்கள் எனக்கச் செய்த செயல்கள் யாவும்
என்னை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது- என்
தலை சீவி சிங்காரித்து பள்ளி அனுப்பிய- குட்டிஅண்ணாவே
ஏன் என்னை விட்டு சென்றீர்கள்?
படித்து டாகடராக வரவேண்டும் என்று கூறினீங்களே
என் பாதிப்படிப்பில் காலனவன் உங்களைக் கவர்ந்ததேனோ?
என்னுடன் எத்தனை குறும்புகள் செய்தீர்கள் இனி யாருளார் எனக்கு
பிறந்தநாள் வந்ததும் மோட்டார் சைக்கிளில் ஏத்திக்கொண்டு ஊரெல்லாம் சுத்துவீர்களே என் பிறந்த நாளும் வந்தது மோட்டார் சைக்கிளும் உண்டு உங்களைக் காணவில்லையே ஏங்குகின்றேன் குட்டிஅண்ணா மீண்டும் வாராயோ?
இன்று என்னைத் தனியாக விட்டு நீ தூரதேசம் சென்றதேனோ உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நீங்கா நினைவுடன்**
**லம்போதரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஊழியரும் எமது சக உத்தியோகத்தருமாகிய வாரி.செல்வநாயகம் அவர்களின் புத்திரன் கோபிநாத் அவர்களின் சிவபதப்பேறு குறித்த இரங்கல்

எமது சக உத்தியோகத்தர் வாரி.செல்வநாயகம் அவர்களின் செல்வப் புத்திரன் கோபிநாத் அவர்கள் அகாலமரணமடைந்ததை இட்டு மிக மிக வருந்துகின்றோம். அன்னார் இளையோர்களுக்குரிய துடிப்பும் ஊக்கமும் மிக்கவராகத் திகழ்ந்தார். இதனாலேயே உடற்கல்வித்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தார். அது மட்டுமன்றி தேசிய இளைஞர் சேவை மன்ற உறுப்பினராகவும் பல்வேறு விளையாட்டுக்கழகங்களில் இணைந்து தமது திறமையை வெளிக்காட்டிய பெருமைக்குரியவர் ஆவார். அதனாலேயே தனது இறுதிக்காலத்தில் 2011ல் மாத்தறை மாநகரில் நிகழ்ந்த இளைஞர் சேவை மன்ற ஒன்று கூடலில் கலந்து தனது அதீத அன்பால் அவர்களின் நெஞ்சிலும் நீங்கா இடத்தைப்பிடித்த சிறப்பிற்குரியவர் ஆவார். இதனாலேயே இவரது இறுதி நிகழ்வுகளில் அவர்களும் வந்து கலந்து சிறப்பித்தமையும் அவரது பெருமைக்கு சான்றாகும். இத்தகைய ஒருவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**தேசிய வீடமைப்பு அதிகாரசபை**

**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத சேவைகள் செய்த இளம் தலைவர் கோபிநாத்

இந்திய தேசத்தின் இளைஞர்களின் விடிவிற்காய் உன்னத மான வழிகாட்டியாக இருந்த சுவாமி விவேகானந்தர் 35 வயது வரையும் வாழ்ந்து இன்றும் என்றும் போற்றப்படுகிறார். தம்பி கோபிநாத் அவர்களும் எமது மக்களிற்காக இளைஞர்களின் விடிவிற்காக தனது மகத்தான சேவைகளின் மூலம் எம் உள்ளங் களை கொள்ளை கொண்டார். சாதி இன மத வேறுபாடுகளை களைந்து மனித நேயத்துடன் பணியாற்றிய காரணத்தினால் தான் அவரது இறுதிக்கிரிகையில் கலந்துகொள்ள மாத்தறையில் இருந்தும் அம்பலாங்கொட கிக்கடுவ பிரதேசத்தில் இருந்தும் சிங்கள சகோதரர் வருகைதந்தனர். இதுவே அவரது நல்ல பண்புகளிற்கு உதாரணமாகும்.

தம்பி கோபிநாத் விட்டுச்சென்ற இடைவெளி எம்மால் நிரப்ப முடியாத ஒன்றாகும். தனது பிறந்தநாளை எம் எல்லோருடனும் கிக்கடுவையில் கொண்டாடியவேளை இதுதான் அவரது இறுதிப் பிறந்த நாள் கொண்டாட்டம் என்று நாம் கனவிலும் எதிர்பார்க்க வில்லை.

அமரர் கோபிநாத் என்றும் எம் இளைஞர்களின் நெஞ்சத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் புனித பாதங்களின் தூய மலராக என்றும் வீற்றிருந்து எம்மை வழிநடத்தட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**தம்பிராசா ஈஸ்வரராசா**
**உதவிப்பணிப்பாளர்**
**தேசிய இளைஞர் சேவை மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரம் வளர்த்த கோபிநாத் அவர்கட்கு விக்னேஸ்வரத்தின் அஞ்சலி

கல்வியிலே உயர்ந்திடுவாய்
கலங்கரை விளக்காய்
காத்திருந்தோம் நாமெல்லாம்
காலனவன் கண்பட்டதுவோ?
கதி கலங்கி நிற்கின்றோம் நாம் இங்கே!

நித்தம் நித்தம் கற்பனைகள்
நிஜமாகும் வேளைதனில்
நிலையில்லா வாழ்விதென
நீயுணர்த்திப் போனாயோ?
நிற்கின்றோம் நிற்கதியாய் நாம் இங்கே

கண்ணைக் காக்கும் இமையாய் என
கருத்துடனே நீயிருப்பாய் என்றிருந்தோம்
உன்னைக் காக்க மறந்த இறைவன்
உன் உயிரைப் பறிக்க விரைந்தானோ?
உருக்கலைந்து வாடுகின்றோம் நாம் இங்கே

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திரு.வே.சிவசிதம்பரம்
அதிபர் (யா/விக்னேஸ்வரக் கல்லூரி)
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபியும் நானும் ....

கோபி எனது Tuition இல் 2004ஆம் ஆண்டிலிருந்து படித்தவன். அன்றிலிருந்து அறிமுகமாகிய அவன் 2005இல் தரம் 11ல் மிகவும் நெருங்கிய விசுவாசமுள்ள மாணவர்களில் ஒருவனானான். பல ஆண்டுகளாக பல மாணவர்களுக்கு கற்பிக்கும் நான் மாணவர்களின் குணாதிசயங்களைப்பற்றி நன்கறிந்துவைத்துள்ளேன். கோபி ஒரு கீழ்ப் படிவுள்ள மாணவனும் திறமைசாலியும் ஆவான். அத்தோடு O/L கணித பாடத்தில் அதிவிசேட சித்தி (A) பெற்று எமது நிறுவனத்துக்கு பெருமை சேர்த்தவர்களில் இவனும் ஒருவனாவான். இவனுடன் பழகிய நாள்கள் இனிமையானவை. எனக்கு பலவிதமான உதவிகளை பலநேரங்களில் செய்துள்ளான். கோபிக்கும் எனக்கும் உள்ள தொடர்பை பற்றி கூறுவதாயின் பக்கம் பககமாக கூறிக் கொண்டே போகலாம். அவ்வாறு கூறுவதானால் அவனுடைய ஆத்மா சாந்தியடையும் என்று நான் கருதவில்லை. எனவே விபத்துக்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முற்படுகின்றேன்.

விபத்துக்கள் நடைபெறுவதை பற்றி தினம் தினம் கேள்விப் படுகின்றோம் ஆனால் கோபியைப்போல் நெருக்கமானவர்கள் இறக்கும்போதுதான் நாம் விபத்துக்கள் பற்றி சிந்திக்கின்றோம். நானும் அவ்வாறே சிந்திக்கின்றேன். இந்நினைவுப்புத்தகம் பெரும் பாலானவர்களின் கைகளில் கிடைக்கும் என்பதால் நான் இந்த விபத்தைப் பற்றி சில கேள்விகளை முன்வைக்கின்றேன்.

எங்கே இந்தவிபத்துக்கான அடிப்படைக் காரணம் காணப்படுகிறது அதிவேகமாக ஓட்டிய வாகனச் சாரதியையா? அதிவேகமாக செலுத்தியபோது அதனைத்தடுக்காத அருகிலிருந்த நண்பர்களையா? உரிய சட்டத்தினைப்பேணும் தரப்பினர் அதிவேக மாக ஓட்டியபோது இதை தடுக்காததா? ஒரு நிறுவன வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்தின் அதிகாரிகள் எவருமின்றி சாரதிகளின் கைகளில் இருந்தது பற்றியா? நிறுவன வாகனத்தில் வெளிநபரை ஏற்றிய சாரதியையா? வாகனத்தில் ஏதாவது கோளாறு இருந்திருக்குமோ என்பதை பற்றியா? நிறுவன வாகனத்தில் ஏறிய கோபியையா? குறைகூறுவது. இப்படி கூறுவதானால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவர்கள் மீதும் குறைகூறலாம். இவ்வாறு குறைகூறுவதனால் எதுவித பயனும் இல்லை. இனிவரும் காலங்களிலாவது சம்பந்தப் பட்டவர்கள் அனைவரும் சட்டங்களையும் கடமைகளையும் செவ்வனே நிறை வேற்றுவார்களாயின் கோபிபோன்ற இத்தகைய இழப்புக்களை தடுக்கலாம். இனிவரும் காலங்களில் எமது முயற்சி யால் விபத்துக்கள் குறையுமானால் அதுவே நாம் அவனுக்கு செய்யும் ஆத்மசாந்தி பிரார்த் தனையாகும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

K. ஐங்கரன்

இயக்குனர்

நியூ எக்சலன்ற் கல்வி நிலையம்

கரவெட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கரவை திருவள்ளுவர் விளையாட்டுக்கழக உறுப்பினர் செல்வன் செ.கோபிநாத் அவர்களின் திடீர் மறைவு குறித்த நினைவுகள்

வட்டநிலா போன்ற வதனம் கொண்டாய் கூறும்
வார்த்தையிலே பண்புகளும் கலந்து வரும்
திட்டமிட்டு வீரமுடன் போட்டிகளில்
தீரமுடன் விளையாடி வெற்றி கண்டாய்!
கட்டழகு காளையெனக் காணப்பெற்றோர்
கனவுகளை கற்பனையாய் ஆக்கித் தோழா!
எட்டுத்திக்கும் தேட வைத்துச் சென்றாயோடா
எமக்கு எப்பிறப்பில் மாறுமடா இத்துயரம்!!

மலர்களோ ஆயிரமாயிரம் ஆனால் நறு
மணமோ சில மலர்க்கே அறிவோம் ஈதே போல்
பலரும் எம் கழக தோழர்கள்தான் -என்றாலும்
பார்த்தீபன்போல் பண்பு கொண்ட நண்பா
சிலகாலம் எம்முடனே வாழ்ந்து கழகம்
சிறப்பாக அமைந்திட நீ முயல்வாய் என்றால்
இலவு காத்த கிளிபோல் எமை ஏமாற்றி விட்டு
ஏனகன்றாய் கோபிநாத் இயற்கை ஈதே!

கோகுலப் பரம்பரையில் வந்ததாலோ -வை
குண்டத்தை சென்றடைய அவசரமோ? -வெல்ல
பாகுடன் தேன் கலந்த வார்த்தை யின்றும்
பைந்தமிழாய் எம்மிடையே கேட்குதடா
வேகுதடா வேதனையில் உள்ள மெல்லாம் - எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையை நாமன்றி அறிவிலாயோ
ஆகுதியாய் ஆகிவிட்டாய் கோபிநாத் நீ
அணையாத சுடரொளியாய் வீற்றிடடா!!!

அலை அலையாய் வந்ததே...! மக்கள் கூட்டம்
அழுதழுது புரண்டதே எங்கள் ஊர்
நிலைகுலைந்து போனோமடா நண்பா -நாம்
நிலையிழந்த வேளையெல்லாம் வந்தாய்- நீ
விலைமதியா விளையாட்டில் வாழ்ந்த கழக
வீரர்கள் நீர் சிந்தி உன் பாதங்களில்
குலையாத கவலையுடன் கழகம் சமர்ப்பிக்கும்
கண்ணீர் அஞ்சலியாய் ஏற்றுக்கொள்ளே...!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மாறாத துயருடன்**
**கழக உறுப்பினர்கள்**
**திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபி ஓர் கலங்கரை விளக்கு

மனிதன் மனிதனாக வாழ்வது எப்படி என்பதை இரண்டு தசாப்த காலத்திலேயே உணரவைத்த உத்தமர் கோபிநாத் ஆவார். பழகுவதற்கு இனிமையானவர் பகைவரும் மதிக்கும் பண்புள்ளவர். நான் கிராம அலுவலராக கடமைக்கு வருவதற்கு முன்பே என்னுடனும் எனது குடும்பத்தாருடனும் நெருக்கமாக பழகியவர். அமரர் கோபி வாழும்காலத்தில் பெரியோரை மதித்தல், கடின உழைப்பு, சமூகமேம்பாட்டுக்கு பாடுபடல் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக்கல் போன்ற சிறப்பு அம்சங்களை கொண்டிருந்தமையால் என்னை மிகவும் கவர்ந்தார்.

கோபி அவர்கள் உடல்வாகு மிக்க திடம்கொண்ட வாலிப ராக காணப்பட்டார். சிறந்த விளையாட்டு வீரராகவும் விளங்கினார். அத்துடன் விளையாட்டுதுறை சார்ந்த கல்வியிலே பல்கலைக்கழ கத்திலும் கற்றார். எனக்கும் விளையாட்டுத்துறையில் ஈடுபாடு இருந்தமையால் விளையாட்டுத்துறையில் உள்ள சில நுணுக்கங் களை நான் இவர் மூலம் அறிந்து கொண்டேன்.

கரவெட்டி தெற்கு கிராமத்தின் அபிவிருத்தியில் தீராத நாட்டம் கொண்டவராக இருந்தார். நேரம் கிடைக்கும் பொழு தெல்லாம் எனது அலுவலகம் வந்து கிராமத்தின் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடுவார்.

இறப்பு என்பது இயல்பானதுதான் ஆனால் வாழ்வில் வசந்த காலத்தில் ஏற்பட்டது கோபியின் அகால மரணத்தை யாராலும் ஜீரணிக்க முடியாது. அவரின் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது. அவரின் இழப்பால் வாடும் அன்னாரின் குடும்பத்தினரு க்கு தாங்கிக்கொள்ளும் சக்தியை இறைவன் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் கோபியின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நா.சிவதர்சன்**
**கிராமஅலுவலர்**
J/ 365 **கரவெட்டி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ம் நாள் நினைவஞ்சலி

கல்வியிலே உயர்வு பெற காத்திருந்து சென்றீர்!
காலையிலே கதிர் ஒளி பரவும் அவ்வேளை
நல்லவனாய் குடும்பத்தின் நான்காவது மகனானாய்
நடுத்தெருவில் நடந்தவை கண்டு தந்தை சென்றார்.
வல்லவனாய் எம் ஊருக்கும் வீடுகட்ட உதவிசெய்தாரே
வருந்தி அவர் மனம் நோகத் திகைத்துவிட்டோம் நாமே!
எல்லோர்க்கும் உதவிட வேண்டுமென்ற உள்ளம் -உன்
தந்தைக்கு இருக்க உனக்கு இந்தநிலை வந்ததேனோ?

கல்நெஞ்சும் கரைந்துவிடும் கோரவிபத்துக் காட்சி
மின்கம்பம், பனைமரம் இவை பட்ட பாடு
நில்... என்று வந்தானோ யமதூதன் விரைந்து
உயர்படிப்புப், பலதிட்டம் எல்லாமே பொடிப்பொடியாய் ஆச்சு
எல்லோர்க்கும் இறப்பு வரும் என்று இருந்தாலும்
இளமையிலே உமை இழந்ததோ கொடுமையிலும் கொடுமை
பல்லுயிரும் வாழவேண்டும் எனநினைக்கும் தாய் தந்தை
பாலன் நீ பட்டதுயரத்தை எந்நாள்தான் மறப்பார் கோபி.

வார்த்தை இல்லை உன் இழப்பு நடந்தவைகள் உரைக்க
வாகனம் பட்ட பாடு பலர் கண்டாரோ மனம் திகைக்க
கூர் அறிவு உடற்கல்வி பட்டப்படிப்பு எங்கே போச்சு
குறுகியே சில நொடிக்குள் மறைந்து போயாச்சு...
வேர்த்தொழுகி விட்டதையா விம்மி மனம் திகைத்து
விடிகாலை நடந்ததையா மனம் பதைக்க அந்த விபத்து
நீர் சொரிந்து போனதையா கண்கள் உமை நினைத்து
நீள் துயில் கொண்டு சென்றாயோ இறைவனை நினைத்து.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**முருகன் கோவிலடிவாழ் மக்கள்**
**புலோலி வடமேற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபியின் நினைவுகள் கோலமிடும் நெஞ்சினிலே .....

கோபி!!!...........
சொந்தமுற்ற நினைவோடு சுவாசமும்
சோகமே என் சுகவாசமாய்!
சொர்க்க வாசல் தட்டும் பாவியாய்
சோர்ந்தே போனோம் உன் செய்தி கேட்டு!

காலை வேளையிலே காலனவன் பின்தொடர
கடுகதியில் சென்று கதியற்றுக் கிடந்தனையோ!
காலங்கள் கழிந்தாலும் மாறாது என் மனதில்
ஞாலத்தில் உள்ளவரை உன் கீறல்கள்!

நெட்ட நெடும் பாதையிலே வித்துடைந்த
பச்சைப் பசும் பயிரெனவே நீயானாய்!
மிச்சமென ஏது கண்டான் என் நண்பன்
கண்ணீரையும் செந்நீரையும் தவிர!

ஆர்க்கும் கடலும் அமைதி கொள்ளும்
ஆனால் உன் குடும்பம் மனவமைதி கொள்ளுமா!
தீர்க்கும் வழிகளைத் தினமும் தேடி
தீயிடை மெழுகென வாடுகிறதேன் உன் உறவுகள்!

நண்பனின் மைந்தா! நீ கனவின் கருக்குழியில்
காலமெல்லாம் கடைந்தெழுந்த ஒரு அமுதம்!
யுகக் கங்குலில் ஒரு சூரியன்!
விடியாத இருளின் வேரில் ஒரு வெளிச்சம்
குணத்தில் குன்று குவலயத்தில் இனி எப்போகாண்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா!!!...

சுழலும் வையகத்தின் சுமைகள்தான் நாங்கள்
உலகை நாமே சுற்றுவதில்லை உணர்ந்து கொள்!
வற்றாத கடலில் ஓயாத அலையது போல்
தூங்காத மனதில் நீங்காத நினைவுகளை
நிலை நிறுத்தி நிம்மதி இழக்காதே!
கடந்துவிட்ட காலத்தின் ரேகைகளை அளவிட நினைக்காமல்

மலரும் நேரத்தின் இலக்கணத்தை வகுத்துக்கொள்!
சில நியதிகள் இங்கு நிச்சயிக்கப்பட்டவையே!
பௌர்ணமி நிலவாகித் தேய்ந்து விடுவதனால்
கலங்கியா விடுகின்றது!
காலங்களால் கசக்கப்பட்டாலும்
கைவிரல் வெளிகளினூடே உலகைப்
பார்க்கத் துடி நம்பிக்கைகளால்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**இனிய நண்பன்**

**சோ.கணநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபி எனும் கோபுரம்

இடியென ஒரு செய்தி எம் இதயத்தை இறுக்கிக்கசக்கியது வானும் அழுதது மண்ணும் அழுதது தென்றலாக திரிந்தவன் திசை மாறி மாயமாய்மறைந்து செயலிழந்தபோது எம்மனமும் விழியும் உன்னை எங்கே... எங்கே... என்று தேடிக்கொண்டிருக்கிறது.

வள்ளுவனின் பொய்யா மொழிக்கு இலக்கணமாகி, 'வாழ்ந்தால் அழகாக வாழக்கற்றுக்கொள் இல்லாவிடில் அசிங்கமாகாமல் இரு' என போதித்து வாழ்ந்தவன் நீ இச்சின்ன வயதில் மனிதத்தை நேசித்த மனிதனாக வாழ்ந்தவன் 'உள்ளத்தனயனது உயர்வு' என்று உன் செய்கையால் போதித்துக்காட்டியவன்.

'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற குறளுக்கு இலக்கணமாகி தீரவிசாரித்து உணரும் பண்புள்ள பிள்ளை நீ மனிதப்பண்பு இல்லாதவர் மரம் போல்வர் என அவர்களை இனங்கண்டு திருத்தியவன் நீ. வயது வந்த பெண்களெல்லாம் உனக்கு தாய் என மதித்தவன் மற்றவர் களை உனது சகோதரிகளாக மதித்தவன். நீ தடம் பதித்த ஒவ்வொரு காலடியும் மகத்தானவை. ஒவ்வொரு இடத்திலும் சாந்தி சமாதானம் சகோதரத்துவம் என போதித்தவன் இலங்கையின் ஐக்கியம் தேசியத்தின் அடையாளம் நீ.

ஒரு மனிதனின் வாழ்வின் மகத்துவம் இறப்பில் தான் உணரப்படும் என்பதை உணர்த்திச் சென்றவன் நீ. நீ நிரந்தர மானவன் உனக்கு அழிவில்லை எந்த நிலையிலும் உனக்கு மரணமில்லை. மரணமில்லா உலகிற்கு நீசென்றுவிட்டாய் ஆனால் நாம்... எமக்காக நீ செய்தது இவ்வுலகில் எராளம் ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக நாம் என்ன செய்வோம்...

எமது மண்ணின் மைந்தனான உனக்கு நாம் இனி செய்வதெல்லாம் உன் சிந்தனைக்கு இயன்றளவு வடிவம் கொடுத்து செயற்படுத்த முயல்வோம். நல்லவற்றை நாடி நாம் செய்யப்பழகுவோம். பகைவனுக்கும் இரக்கம் காட்டும் மனதை வளர்ப்போம். நண்பனுக்கு மட்டுமல்ல பகைவனுக்கும் உதவி செய்வோம் அழைத்தபோது நீ வந்து உதவுவதுபோல நாமும் வாழப்பழகுவோம் அன்புடன் அறிவையும் வளர்ப்போம்.

எல்லாவற்றிலும் பொதுநலம் பேணிவருவோம் இதைத்தவிர நாம் என்ன செய்வோம். நீயே சொல் இந்த மண்ணில் உன்போல் யாரும் இருந்ததில்லை இனி வரப்போவதுமில்லை என உணர்ந்து கொண்டோம். எம்முடன் சங்கமித்த உன் ஆன்மா அமைதி பெறட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உன்னைப்** பெறாது பெற்ற

**தந்தை சு.செல்வராசா (அதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"

இப்பூவுலகில் பிறந்தவர்கள் எல்லாம் என்றோ ஒரு நாள் இறைவனிடத்தில் செல்ல வேண்டும் அது நியதி ஆனால் நற்பண்பும் நற்பணியும் சமூகசிந்தனையும் குடும்பப்பற்றும் கொண்டு செயல்ப்பட்ட அமரர் கோபிநாத் அவர்களை இந்த இளவயதிலேயே இறைவன் எம்மிடமிருந்து பறித்தது கொடுமையிலும் கொடுமை. இள வயதிலேயே தனது சிறந்த ஆற்றல்களால் தனது மக்களுக்கு சேவை செய்வதன்மூலம் பல சமூகஅமைப்புக்களில் அங்கம் வகித்து எல்லோர்மனதையும் கவர்ந்தவர் தனது வயதிற்கேற்ப துடிப்புடன் செயல்ப்பட்ட அவருக்கு அவரின் சுறுசுறுப்புக்கேற்ற கல்வித்துறையும் பல்கலையில் கிடைத்தது. விளையாட்டு விஞ்ஞான அலகின் ஊடாக சிறந்த சேவையை தனது சமூகத்திற்கு வளங்க முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்ப்பட்டவர்.

நற்பணியாற்றி சமூகத்தை மேன்மை அடையச் செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் செயல்ப்பட்ட எங்கள் செல்வனின் சேவைகளை பெறமுடியாது போனது எங்கள் துரதிஸ்டம். தந்தை யின் வழிகாட்டலில் தானாகவே முன்வந்து எல்லோருக்கும் உதவும் தந்தையின் அதே குண இயல்புடன் செயல்படுத்தன்மை அவர் தனது தந்தையின் மீது வைத்திருந்த மதிப்பையும் பற்றையும் வெளிக்காட்டி நின்றது.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருக்கச் செய்தல" என்பதற்கு ஏற்ப அவைகளில் எல்லாம் போற்றும்படி செயல்ப்பட்டவர். பெரும் ஆவல்கொண்டு தன்னை உயர்த்தி வைத்த தனது தந்தை தாயின் சகோதரர்களின் கடமைகளை செய்து மகன் தந்தைக் காற்றும் உதவி என்ற பொய்யா மொழியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யாக்க உறுதிகொண்டு செயல்ப்பட்ட வேளையில் காலனவன் எல்லாவற்றையும் பொய்யாக்கி அவரை கவர்ந்து சென்றான்.

இந்த இளவலை இழந்து துயரத்தில் துடித்துக்கொண்டிருக்கும் அவர் தந்தை எனது அருமை நண்பர் திரு.செல்வநாயகம் அவர்களுக்கும் தாய் சகோதரர்களுக்கும் எனது ஆறுதல்களையும் அனுதாபங்களையும் கண்ணீருடன் செலுத்துகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பொ.ஸ்ரீபவன்
மதுவரி உத்தியோகஸ்தர்

**"கிளி இல்லாம்"**
**துன்னாலை மேற்கு**
**கரவெட்டி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்கமுடியாத மரணத்தின் நினைவுகளில் ...
## உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி
## விழிப்பது போலும் பிறப்பு

குடும்பத்தினை உயர்த்துவார் என்று கனவு கண்டிருந்த வேளையில் காலன் இப்படி வந்து கடுதியாய் அழைத்துச் செல்வான் என்று கனவிலும் எண்ணியதில்லை. பள்ளியில் எல்லோராலும் மதிக்கப்பட்ட உன் கனவுகளை காலன் மதியாது விதியே. சகல துறையிலும் வல்லவனாய் விளங்கிய உன் ஆற்றலை போற்றிறோர் வந்து தீபமேற்ற வைத்து விட்டாயே. காலையிலே எழுந்து பல்கலை கற்ற பல்கலைக்கழகமது செல்ல காத்திருந்த வேளையில் பார்த்திருந்த காலன் வாகனமதில் ஏறி வந்து உன் விதி முடித்து எம் கதி கலங்க வைத்தானே. ஒப்படைத்த செயலை வேகமாய் செய்வது உன் வீரம் அதிலும் விவேகமாய் செய்வது உன் தீரம். ஆனால் உன் வேகத்தினை மரணத்திலும் காட்டி விட்டாய். உன் நினைவுகளை மனதில் வைத்தால் கண்ணில் கசிகிறது ஈரம். உன் கனவுகளால் அனைவர் மனதிலும் பாரம் ஆனால் நீ சென்றாயே எமைக்கடந்து பல தூரம் இருப்பினும் மண்ணில் பிறப்பவர் இறப்பதும் இறப்பவர் பிறப்பதும் காலத்தின் தேவை இதை எமக்கு உணர்த்தியது கீதாசாரம்.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவன் பிரார்த்திப்பதுடன் இவரது குடும்ப துயரில் நானும் பங்கு கொள்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

M.C. சுரேந்திரா
**சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்**
**பிரதேச செயலகம்**
**பருத்தித்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருந்துகின்றோம்!!!

இடியேறு கேட்ட நாகம்போலும், நாங்கள்
இன்னலுற்றோம் நின் மரணச் செய்திகேட்டு!
படிப்படியாய் உயர்ந்து வந்த நினை இழந்து
பரிதபித்து வாடுகின்றோம் அமைதி கெட்டு!
துடிப்புள்ள இளைஞனாய் எமக்கு என்றும்
துணைவருவாய் என்றிருக்க, இடையில் வந்து
கொடியவன் அக்கூற்றுவன் நின் உயிர் கவர்ந்த
கோரத்தால் மனங்கலங்கி நிற்கின்றோமே!

சிறுவயது முதல் எம்மைக் கண்டாற்போதும்
சிரித்தன்பாய் பழகி மிக்க மகிழவைப்பாய்!
பொறுமையதன் சின்னமுமாய்த் திகழ்ந்தே வாழ்வில்
புதுமைகளைப் புரியும் உயர் எண்ணங் கொண்டாய்!
இறுதிவரை எமக்கரிய சேவை செய்வாய்
என்றெண்ணி நாமிருக்க எம்மை விட்டே
பொறுமையிலாக் காலன் அவன் வலையில் வீழ
பொன்மகனே உனக்கு விதி வந்ததோ?

தாய் தந்தை பெருமைதனை உயர்த்தி வைத்த
தனையனுமாய்த் திகழ்ந்திட்டாய்! இங்கே யாரும்
வாயாரப் புகழ்ந்தென்றும் ஏத்துகின்ற
வண்ணமதாய்ப் பணிகளெலாம் பண்ணி நின்றாய்!
நோய் நொடிகள் இல்லாது கோபி நீயும்
நூற்றாண்டு வாழ்வாய் என்றெண்ணி நிற்க
வாய்புதைத்து விம்மியழ எம்மை வைத்தே நீயும்
வானுலகம் சென்றனையோ? வருந்துகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மாமன் கீழ்கரவை கி.குலசேகரன்**
**(ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி)**
**மாமி திருமதி. இரஞ்சினி, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவாகி உயிராகி வானாகினாய் ....

காற்றின்அலை அணுக்களின் சில நோவுகள்
சூரியனின் ஒளிக்கீற்றிலும் கறுப்புச்சாயம்
பூமியின் சுற்றுகையிலும் ஆசாக அதிர்வு
பூமியில் ஒரு நல்லவனின் வல்லவனின்
எண்ணிக்கை குறைவு

உறவுகள் மட்டுமின்றி மனிதம் கொண்ட
மனிதர்களின் கண்களில் நீர்த்துளி...
என்ன நடந்தது....?
கோபி...கோபி விக்கித்த வார்த்தைகள் தடுமாற
மரணத்தின் அவலச்சேதி... நிறுத்துங்கள்
அவன் எப்படிப்பட்டவன்.....எம்குடும்பத்துடன்
சீனி ஐயாவின் செல்லப்பேரன் சிரிப்பூட்டுபவன்
குடும்பத்தில் எங்களில் ஒருவனாக தம்பியாய்
அண்ணனாய் மாணவனாய் மகனாய்
கூப்பிட்ட போதெல்லாம் வரும்
கண்ணபரமாத்மாவாய்... இனி என்ன?
எல்லாம் முடிந்தது.... இல்லை வருவான் மீண்டும்
எப்போது.....எப்படி...? எப்படியோ.....! அவன்
உறவாகி உயிராகி வானாகி உணர்த்துவோம் அவன்
ஆத்மாவிற்கு சாந்தி.......
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சீனியர் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்ய முடியாத இழப்பு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமைபுரியும் திரு.வாரி செல்வநாயகம் அவர்களின் அருமை மகன் செல்வநாயகம் கோபிநாத் அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு நாம் எல்லாம் உறைந்து போனோம்.

இது ஓர் மிகவும் துன்பகரமான சம்பவம் ஆகும் இருப்பினும் எழுதிச் செல்லும் விதியில் கையை மாற்ற வல்லவர் யார்தான் உள்ளார். அதுவும் பல்கலைக்கழகக் கல்வி பெறும் வாய்ப்பை பெற்றுக்கொண்ட ஓர் மகனின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றே.

திரு.செல்வநாயகம் அவர்களின் பிள்ளைகள் எல்லோரும் முன்னேற்றம் கண்டு வரும் வேளையில் இச்சம்பவம் நடைபெற்றுள் ளது. திரு.செல்வநாயகம் அவர்கள நெடுங்கேணியில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய காலம் தொட்டு நான் நன்கு அறிவேன். மிகவும் கஸ்ரப்பட்டு தன் பிள்ளைகளை இன்று நல்ல நிலைக்கு கொண்டு வந்துள்ளார். இருப்பினும் இந்த இழப்பை தாங்கி மேலும் அவலம் அவர் குடும்பத்தினரும் தம் பிள்ளைகளை முன்னேற்றிட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மாவட்ட முகாமையாளர்களும்**
**சக ஊழியர்களும்**
**தேசிய வீடமைப்புஅபிவிருத்தி அதிகாரசபை**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவன்

நீ இருந்தபோது இந்த தேடல் இல்லை -இப்போது
நினைவுகளின் மடிப்புக்களில் உன்னை
நிறுவி நிறுவி தோற்றுப்போகிறேன்
வழமைபோல் ஒவ்வொரு சேகரிப்புக்களும்
இடம் பெறுகின்றது-ஆனால்
அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நீ இல்லை
நிகழ்கால சமப்படுத்தலில் சரிந்துபோகிறேன்
என் நேற்றைய பொழுதுகளில் எல்லாம் நெறிப்படுத்தலாய்
நீ நிரம்பி இருக்கிறாய்
நாளைய நாட்கள்........?

ஒரு புகைப்படத்திலோ அல்லது
ஒரு பக்க உணர்வுப் பதிவிலோ
உன்னை அடையாளப்படுத்த முடியாது- நீ
விபரிக்க முடியாத உயரம்
மனிதத்தின் அடையாளம்
மகத்துவத்தின் நகல்
போலிகளின் பொய்
சகாப்தங்களைத் தாண்டிய என் சகோதரன்
என் தாயுமானவன்.

**மதுசா மாதங்கி**
**(உடன்பிறவா சகோதரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் உடன்பிறந்தவனே!

எம் உடன்பிறந்தவனே! என்றும்
எம்முடனே இருப்பவனே
இன்று நீ எங்குசென்றாயடா!

காலையில் எழுந்து
கடமைகளை முடித்து
விளையாட்டு உடையணிந்து
வீரனாய் பல்கலைக்கழகம் சென்றாய்.
படிப்பதனை முடித்து விட்டு -அம்மா
பசிக்குதென அழைத்துக்கொண்டு
நிலமதிர நீ நடந்து வருவாயடா
இன்று நீ எங்கு சென்றாய்?

எங்கெல்லாம் சென்று விட்டு
எங்களிடம் வந்திருந்து
அங்குள்ள புதுமைகளை
ஆசையுடன் சொல்வாயே?
இன்று நீ....
சென்ற இடத்தின் புதுமைகளை
எப்போதடா வந்து சொல்வாய்?

பெரியக்கா எங்கு சென்றாலும்
உன் பின்னால்....
சின்னக்கா பஸ்சில் இருந்து
இறங்கி வரும்வரை காத்திருப்பாய்
தங்கையைத் தலைமைத்துவப்பயிற்சிக்காய்
தனியனாக கண்டிவரை அழைத்துச்சென்றாய்
அண்ணாமார் அழைத்தவுடன்
அவசரமாய் ஓடிடுவாய்
தம்பிமாரையும் தங்கையரையும்
தலையில் குட்டிப்படிப்பிப்பாய்
சித்திமாருக்கு நீ காவலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பாமாரின் சிந்தனையாளன்
மாமா மாமிமாருக்கு நீ
மாண்பு மிகு மருமகன்
"சிந்திக்க வேண்டாம்
நான் இருக்கின்றேன்" என்று
அப்பாவுக்கும் அம்மாவுக்கும்
ஆறுதல் சொல்லிவிட்டு
எங்கேயடா சென்றாய்?

நீ நடந்துவரும் ஓசை கேட்க -எல்லோரும்
விடிய விடியக் காத்திருக்கின்றோம்
நீ பாடிவரும் ஒலிக்காக
பாதையெல்லாம் பார்த்திருக்கின்றோம்
நீ கைகொட்டி ஆடும்
காவடி ஆட்டம் இன்றும் எம்
கண்முன்னே நிக்குதடா..!
நாமேதும் கேட்டவுடன் -நீ
நடித்து நளினம் செய்யுங்காட்சி
நாளாந்தம் நம் நினைவில் வருகுதடா!
உணவு உண்ணும்போது
ஊட்டிவிடு என வாய் திறப்பாய்
தலையில் எண்ணெய்வைத்து
தடவி விடு என தலை நீட்டி
சிரித்தபடி நான் இன்னும்
சின்னப்பொடியன் என்பதுவும்
சிந்தைவிட்டகலாது இன்றும் இருக்குதடா
உன் செயல் எல்லாம் நினைவில் வருகிறது
நீ மட்டும் ஏனடா இன்னும் வரவில்லை?

எம்மைச் சிறப்புற வாழவைக்க
எத்தனை திட்டமிட்டாய்-என்றும்
கண்ணை இமைகாப்பதுபோல்-எம்மை
கவனமுடன் காத்து வந்தாய்
என்ன துன்பம் வந்தபோதும்
"குட்டி" என்று அழைத்தபோது
எம் முன்னே ஓடி வந்து நிற்பாயடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் கதறுகின்றோம் ஆனால்
நீ மட்டும் ஏனடா இன்னும்வரவில்லை?

எல்லோருக்கும் நீ கோபி
எங்களுக்கு மட்டும் நீ "குட்டி"
கோபியைப்போல் ஒரு தம்பியுடன் பிறக்க
கொடுத்து வைத்தவர்கள் நீங்கள்- என்று
உன் நண்பர்கள் சொன்ன மொழி
இன்றுமே கேட்குதடா

ஆண்பனையின் நுங்கே
அணில் கோதா மாம்பழமே- என்று
ஆராரோ பாடிய அன்னையின்
பெற்ற வயிற்றைப் பெருமைப்படுத்தப்
பிறந்தாயோடா?

"மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை என்னோற்றான் கொல்
எனும் சொல்" என வாழ்ந்து காட்டி
உன்னுடன் பிறந்த நாம்
உலகில் உன் பெயரைச் சொல்லி
வாழ வழிவகுத்து விட்டு
நீ மட்டும் எங்கேயடா சென்றாய்?

பாவப்பட்ட மக்களுக்காய்
யேசுபிரான் சிலுவை சுமந்தார்
யார் பாவ விடுதலைக்காய்
நீ சிலுவை சுமந்தாயடா

ஆண்டவனின் நீதிசபையில்
அநீதிகள் நடப்பதா? அல்லது
உன் போன்ற பிறப்புக்கள்
உலகிற்கு திகட்டும் வரை
இருப்பதில்லையா?
உன்னையும் எங்களையும்
பிரிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் என்ற நீண்ட
இடைவெளி என்பதுதான் விதியா?
இல்லையடா.....
மீண்டும் நீ ஓர் உறவாய்.....
எம் மடிமீது குழந்தையாக.......

எமக்கு இன்னுமோர் பிறப்பு உண்டேல்
பிறக்க வேண்டுமடா
உன்னுடன் பிறப்புக்களாய்
மரணத்தின்போதும் பிரிக்க முடியாத
உன் உடல் உறுப்புக்களாய்

அது வரையில் நாம் உன் நினைவுகளோடு
உன்னுடனேயே.........

**அக்கா (கோகிலா)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவை மைந்தன்

மண்ணிலே பிறந்தவர்கள் யாவரும் ஒருநாள் மண்ணை விட்டு ஏகிடுவர் என்பது நியதி. மண்ணில் பிறந்தவர்கள் யாரும் மண்ணில் எவ்வளவு காலங்கள் வாழ்ந்தார்கள் என்பதையல்ல அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? என்பதைத்தான் உலகம் உற்று நோக்குகிறது. சில காலம் வாழ்ந்தாலும் தன் சிந்தனையால் செயலால் எம் சிந்தனைகளை கவர்ந்தவர் அமரர் செல்வநாயகம் கோபிநாத் வாழும் காலத்தில் கல்வியில் மிகுந்த கரிசனை காட்டி நல்லுயர்வு பெற்றுவரும் வேளையில் அவர் காலனின் வலைப்புட் சிக்குண்ட செய்தி எம் கண்ணனை குளமாக்கியது. இன்னல்கள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து முன்னேறி வந்த ஒருவரின் உயிர் இழப்பால் முழு ஊருமே கதிகலங்கி நிற்கின்றது. பெற்றவர்கள் உறவினர்கள் வாய்புதைத்து நிற்கின்றனர் நல்லதோர் கல்வி மானாக நாட்டுக்கு நற்சேவை செய்வார் என எதிர்பார்க்கப்பட்டவர் காலத்துக்கு முன்பாகவே காலனால் கவர்ந்து செல்லப்பட்ட செய்தி நமக்கெல்லாம் பேரிடியாக நிற்கின்றது.

கொளரவமான குடும்பத்தில் பிறந்து மிக்க அன்பாலும் பண்பாலும் பிறரைத்தன்பால் ஈர்க்கவல்ல கோபி கோரவிபத்தில் பலியானமை எம் அனைவரதும் நெஞ்சங்களை அதிரவைத்தது.

அன்னாரின் பிரிவால் வாடும் அனைத்து உள்ளங்கட்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பொ.தம்பிமுத்து**
**பிரதேசசபை உறுப்பினர்**
**வளர்மதி கரவெட்டி கிழக்கு**
**கரவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகிதத்தில் எழுத முடியாத காவிய நாயகன் ...

தெருவிபத்தில் யாரைப் பார்த்தாலும்
திகைத்திடும் என் நெஞ்சு
திரும்பத்திரும்ப பாவம் சொல்லி
தவிக்கும் என் மனசு

கடைசியில் நீ போன பாதை
பார்க்கவைத்த பாவியானேன்
இடைவழியில் கூட நினைக்கவில்லை
நீதான் சிக்கி இருப்பாயென்று!

காலனிடம் காப்பாற்ற காசு தந்து
வழியனுப்பினேன்- ஏனடா
கடைசிவரை கூட இருக்காமல்
இடையிலேயே போய்விட்டாய்!

தொலைபேசி அழைத்தாலும்
தொலை தூரம் சென்றாலும்- உன்
காத்திருப்புக்கள் தான்- என்
நினைவில் எப்போதும்.

என் குறுகிய சிந்தனைகள் சிதறிப்போனது
நீ போட்ட திட்டங்கள் உடைந்துபோனது
என எண்ணி இருந்து விம்மி அழுதபோது
சோர்ந்து போன என்மனதில்
உன் நினைவு வந்ததும்- துணிந்தெழுந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தம்பி எம்மைவிட்டுப் போகவில்லை
அவன் கூறிய வீர வார்த்தைகள்
என் மனதில் தடங்களாய் பதிந்திருந்தது
அவன் உதட்டில் வந்த ஒவ்வொரு வார்த்தையும்
என் உணர்ச்சியை தட்டி எழுப்பியது
நினைவுகளை மீட்டுப்பார்த்தேன்-அவன்
உடல் தான் பிரிந்தது உணர்வுகள் ஒவ்வொன்றும்
என் அணுக்களில் உறைந்து போயுள்ளது

உன் திறமையால் இமயமலையும் பிளக்கும் காலம்
உன் வேகத்தால் நைல் நதியையும் கடக்கலாம்
ஓடும் கால்களை இழுக்க ஒரு கூட்டம் இருந்தாலும்
உதிரம் சிந்தி என் தம்பி காப்பாற்றுவான்
அசையும் கைகளை அடக்க ஒரு கூட்டம் இருந்தாலும்
அலையாய் நின்று எதிர் நீச்சலடிப்பான்
எம்மோடு என்னென்றும் இருப்பான்
எமக்கு துணை வீரனாக........

அக்கா (ஊர்மிளா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உள்ளத்தில் என்றும் உன் நினைவுகள் ...

என் உள்ளத்தில் என்றும் குடியிருக்கும் எம் குட்டி அண்ணாவே சிறுவயதில் இருந்து எங்குசென்றாலும் எம்மை அழைத்துச் செல்வாயே ஏன் இன்று சொர்க்கவாசலுக்குளம்மை எல்லாம் தவிக்கவிட்டு தனியாக சென்றாய்? நாம் படிக்காவிடில் எம்மை பேசி நாங்கள் எல்லோரும் வேலை செய்யும்போது நீங்கள் என்னசெய்யப்போகிறீர்கள் என்று நித்தம் நித்தம் கூறி எம்மை படிக்க வைத்தாயே! இன்று நாம் ஊக்கமுடன் படிக்க மேலும் எம்மை வளர்க்க யார் வருவார். நீ பேசினாலோ அடித்தாலோ அம்மாவிடம் முறைப்பாடு செய்து உன்னை அடக்கிவிடுவோம். இப்போது நீ சீறும் அழகைப்பார்க்க ஏங்குகின்றோம் எப்போதும் வாராய்...... உன்குரல் எப்போதுகேட்டாலும் அண்ணா வாறார் அடிக்கப் போகிறார் என்று புத்தகம் எடுத்துப் படித்துக்கொண்டு இருப்போமே! இன்று நாம் உன் ஊக்கத்தில் படித்து எம்வாழ்வில் அடி எடுத்து வைக்கும் முதல்படி பரீட்சையையே எம்மால் எழுதமுடியாமல் போய்விட்டதே. இதற்காகத்தான் இவ்வளவுதூரம் எம்மைப் படிக்கவைத்தாயா?

கங்காரு தன்குட்டியை மடியில் வைத்து பாதுகாப்பதுபோல் நீ எம்மை பாதுகாத்தாயே இப்போது ஒரு நொடியில் உன் உயிரை காப்பாற்ற முடியவில்லை என்று வருந்துகின்றோம். யாரை காண்பதற்காக எம்மை தவிக்கவிட்டு இவ்வளவு வேகமாக சென்றாய். கடல்அலை ஓயாது அடித்துக்கொண்டு இருப்பதுபோல் எம் உள்ளத்திலும் இருக்கும் உன் நினைவுகள். சிட்டுக்குருவி களாக திரிந்த எம் சிறகுகளை ஒடித்துவிட்டு நீ மட்டும் சொர்க்க வாசலில் பறக்கிறாயே......? எப்போது எம் கூடு திரும்புவாய் கூடி மகிழ என்று எதிர்பார்த்துக்கொண்டு உன் ஆத்மா நின்மதி அடைய ஆயிரம் தடவை ஆயிரம் கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

**தங்கைமார் (தனுசா, தர்சனா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயில் கொள்ளப்போனதேனோ

புன்னகை வதனம் பூப்போல விரிந்த உள்ளம்
பட்டாம் பூச்சியாய் பறந்த எம் அண்ணாவே!!
பாதியில் பிரிந்ததேனோ?
எத்தனை ஆசைகள் கனவுகள் கண்டோம்
எம் கனவுகள் நனவாகுமுன் கருணையில்லா காலனவன்
சடுதியில் கவர்ந்து சென்றதேனோ
நித்தம் உன்னை நினைத்து எம்மனம்
துடியாய் துடிக்கிறது- நீ
இன்று எம்மை விட்டு துயில்
கொள்ளப்போவதேனோ- அண்ணாவே
நீ மீண்டும் எம் குடும்பத்தில் தவழ்வாய் என்று
எதிர்பார்த்து உன் ஆத்மாசாந்தியடைய
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன்பிரிவால் துயருறும்
உடன் பிறவா சகோதரர்கள்
**சரண்யா, மதுசன், சர்மிலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் விழிவெள்ளி

கண்ணை இமை காப்பதுபோல காலமெல்லாம் காத்திடு வாய் என்று கனவு கண்டேன். என் கனவினை கணப்பொழுதில் கலைத்துவிட்டு கடவுள்பாதம் தஞ்சம் சென்றடைந்தாய். கண்டி வரைக்கும் தலைமைத்துவப் பயிற்சிக்குச் செல்லும்போது என் சின்னண்ணாவின் கைபிடித்து கவலையேதுமின்றிக் கம்பீரமாய்ச் சென்றேன். இன்று மட்டக்களப்பு பல்கலைக்கழகம் செல்லும்போது மகிழ்வுடன் கைபிடித்துச் செல்ல தேடினேன் என் அண்ணாவின் கரங்களை அவை கிடைக்கவில்லை.

தாயாய், தந்தையாய், சகோதரனாய், நண்பனாய் எல்லா மாக இருந்தும் எம்தேவை எதுவென நாம் கேட்கமுன்னே அறிந்து நிறைவு செய்வாய். அவை எல்லாவற்றையும் விட நீ தான் எம் தேவை என உணராமல் சென்றுவிட்டாய். நாம் ஒரு படியில் ஏறும் முன் அடுத்து என்ன செய்வதென திட்டமிடுவாய் நீ போட்ட திட்டங்கள்...... இனிது நிறைவேற உயிருள்ளவரை முயற்சி எடுப்பேன். அண்ணா நீ இல்லை என உணரவில்லை எங்கேயோ ஒரு தொலைவில் இருதாலும் தொலைபேசி மூலம் கட்டளை இடுவாயே அதுபோல் எங்கேயோ இருக்கின்றாய் என நினைத்துக் கொண்டு என் கடமை முடிப்பேன். மனிதனாய் இருந்து எம்மை வழிநடத்திய நீ இனி தெய்வமாய் இருந்து வழிநடத்து. அன்று நாம் கடவுளை வணங்கி எல்லாக்காரியத்தையும் தொடங்கினோம் இன்று கடவுளாக உன்னை மட்டும்தான் நினைக்கின்றோம் உன் ஆசியுடன் நீ காட்டிய வழியின் பின்னே என் கல்விப்பாதையை தொடர்கிறேன் உன் நிழலில் உன்னோடு வரும் வரை.

**தங்கை (மோகனா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எனை மறந்தாய்?

என் அன்பு சோதரனே.......!
நினைவுகளை விதைத்துவிட்டு
உருவத்தை மறைத்துவிட்டு எங்கு சென்றாய்
உனைத்தேடி களைத்த கண்கள் உன்
நினைவுகளில் குளமாகிறதடா!

இடியோசைபோல் வந்தசெய்தி
செயலிழந்து போனதடா என் நாடிநரம்புகள்
உயிர் தருவேன் என்று ஓடி வந்தேன்
உதிர்ந்த மலராய் உன்கோலம் கண்டேன்!
அவஸ்தை வந்த நேரமெல்லாம்
அழைப்பாய் அண்ணாவென
யாருமற்ற வீதியிலே யாரையடா அழைத்தாய்!
இறுதிவரை என் அருகிருந்தாய் -உன்
விதி அறிந்தா என்னை
தொலை தூரம் அனுப்பி வைத்தாய்

பட்டம் பெற்று வா என்று அனுப்பி வைக்க -நீ
பாதியில் சென்றதென்ன
தொட்டுப்பறிக்க முடியாத காலன் உனை
தட்டிப் பறித்துச் சென்றானோ
எத்தனை இலட்சியங்கள்....
எத்தனை எதிர்பார்ப்புக்கள்.....
அத்தனையும் கானல் நீரானதுவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிழை செய்தேன் எனை விட்டுப் பிரிந்தாய்?
ஒரு முறை நினைத்தாயா ஒட்டிப்பிறந்த இரட்டையர்போல்
ஒற்றைப் படுக்கையில் துயில் கொன்றதை
கண்டு வந்த புதுமைகளை
களிப்புடன பகிர்ந்ததை
ஒரு கதிரைக்கு நாம் இருவரும்
போட்டியிட்டதை
யார் கண் பட்டதோ!
எட்டாத தூரத்திற்கு சென்று விட்டாய்!
இனியார் என்னோடு உனைப்போல் உறவாட....
நண்பனாய், தோழனாய், சோதரனாய், பல வடிவம் கொண்டாய்

புன்னகை தவழும் உன் முகத்தையும்
கம்பீரமான உன் நடையும்
எப்பிறப்பிலடா காண்போம்!
உறவுகளை உருகவிட்டு
தனியாய் உறங்கிப்போனதென்ன
என்ன செய்வேன் நான்?
உன்னைப்போல் வீரனல்ல
கண்ணில் நீர் சொரிய
காலனை வஞ்சிக்கின்றோம்.
இன்னொரு பிறப்பிலாவது
எம் குடும்பத்தில் உறவாட
வருவாயா என்ற ஏக்கத்துடன்.!!!!!

**என்றும் உன் நினைவுடன்**

**அண்ணன் (மயூரன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்மணியே வந்துவிடு ....

கண் இமைக்குள் உனைவைத்து பக்குவமாய் உனைவளர்த்தோம் வஞ்சமில்லா உன் பேச்சும் ஆண்பிள்ளை இல்லை என்ற எம் குறைகளை நீக்கி நீ எமக்கு துணையாய் நிற்பாய் என்றெண்ணி இருந்தோம். ஆனால் இப்போது உன் முகத்தைத்தேடி சிறகிழந்த பறவைபோல் நித்தம் வாடுகின்றோம். இரவு பகல் பாராமல் உன்னை நாம் தோழில் சுமந்த கைகள் இப்போது உன்னை தேடுகிறதே. துன்பம் வரும்போது துள்ளி வந்து கைகொடுப்பாய் துயரம் வரும்போது ஓடிவந்து நீக்கிடுவாய் இப்போது துன்பமும் துயரமும் சேர்த்து வந்துவிட்டது கை கொடுக்க நீ வாடா குட்டி என்று அழைத்தும் ஏன் இன்னும் உனை காணவில்லை. சூரியன் கிழக்கில் இருந்து மேற்கு திசைக்கு சென்று மீண்டும் உதிர்ப்பதுபோல் நீயும் எம்மைவிட்டு நீங்காது தினமும் வந்து செல்வாயா? நாம் உணவு உண்ணும்போது வாய் நீட்டி ஊட்டிவிடு சித்தி என்று கேட்டு உண்பாயே இப்போது நாம் உண்ணும் போது கண்கள் உன்னைத் தேடுதடா பூவில் வாசம் இல்லாவிட்டாலும் உன் பேச்சின் வாசம் என்றும் எம் நெஞ்சத்தில் கலந்திருக்கும்.

உன் நளினம் காண உன்னைச் சுத்தி இருக்கும் சித்தி சித்தப்பா மாமி மாமாமார் சகோதரர்கள் எல்லோரும் இப்போ ஒடுங்கி கிடக்கிறார்கள் இதை ஒரு கணம் சிந்திப்பாயா? சொர்க்க வாசலுக்கு எமை அனுப்பி விட்டு நீ திரும்பிவாடா! உன்னிடத்தை நாம் நிரப்புகின்றோம் நீ வருவாயா?

**சித்தி சித்தப்பாமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாய் நிற்பாய்

தம்பி என்று அழைத்திட ஆசையாக உள்ளது.
அண்ணா என்று அழைத்திடும் உன் குரல் கேட்குதடா!!
ஆனால் உன் உருவமோ மாயமாய் மறைந்தது.
ஏறு நடையுடன் காளையென நீ வரும் அழகை கண்டு
என்தம்பி வீரனா? என ஏங்கி நிற்பேன்.
குடும்பத்தில் மூத்தபிள்ளை நான் ஆனாலும்
செயலில் மூத்தவன் நீ என்று
அம்மா அடிக்கடி சொல்லுவர்.
என்ன காரியம் ஆனாலும் என் முடிவில்லாமல்
செய்யமாட்டாயே..! ஏனடா? என்னை கேட்காது போய்விட்டாய்?
பாசத்தில் இலக்குவன், வீரத்தில் வீமன்,
தர்மத்தில் கர்ணன், நேர்மையில் அரிச்சந்திரன் என்று
நான் சொல்லவில்லை உன் சுற்றம்தான்
இப்போது சொல்லுகிறது.

நிழலின் அருமை வெயிலிலே தெரியும் - உன்
அருமை இப்போதுதான் தெரிகிறதே!!.
எம் வீட்டு நிகழ்வுகளுக்கு நீ மட்டும் காணும் -உன்
காரியத்திற்கு எம்மால் தோழ்கொடுக்க முடியவில்லையே!!
என் பொறுப்பை பங்கேற்க உன்போல் ஒருவன் எப்படி.......?
என்தம்பி என்று சொல்லும் வார்த்தையை சிலகாலம் தந்துவிட்டு
பலகாலம் பிரிந்ததேனோ!!
உன்திறமை கண்டு காலனவன் பொறாமைகொண்டானோ?- நீ
என் துணையாய் என் நிழல்போல் வருவாய் என்று
எண்ணி எண்ணி நீ போட்ட திட்டங்களை நிறைவேற்ற துணைநின்று
எனக்கு சக்திகொடு?

**அண்ணா**
**(லோகேஸ்வரன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என் வழிகாட்டி ...

இளையவனாக நானிருந்து
விளையாட்டாய் திரிந்தபோது
எனக்கொரு பிரச்சனை என்றதும்
என் பிணக்கைத் தீர்த்து வைக்க
பல பேருடன் போராடுவாயே!
ஆசானாய் அறிவுரை கூறி..
நண்பனைப்போல் நட்புடன் கூறி...
நல்லவனாக நான் வாழ வழிநடத்தி
நற்பாதை காண்பித்தாயே!!- ஏன்
இதற்காவா என்னை அனுப்பிவைத்தாய்

பரிவு காட்டும் உன முகம்
கணீரென்ற உன் குரல்
செயல்வேகம் காட்டும் உன் நடை
அத்தனை அழகும்...
பிறரை உன் பால் ஈர்த்ததடா
காலத்தின் தேவை அறிந்து
எல்லோருக்கும் பணியாற்றிய உன்னை
காலனவனுக்கும் பிடித்துவிட்டதுவோ?
நீதான் எம் தலைவன் எம்மை வழிநடத்துபவன்
என்றெண்ணி இருந்தேன்... எல்லாம் முடிந்ததுவோ
உன் தம்பி என்று சொல்லி என்னை அறிமுகப்படுத்துவேன் இனி
யார் தம்பி என்று சொல்லுவேன்
எல்லாவற்றிற்கும்முற்றுப்புள்ளி வைத்துவிட்டு
சென்றுவிட்டாயே.........

உடன்பிறவா சகோதரன்
மாதுளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலவிருட்சம்

எத்தனையோ மையிலுக்கு அப்பால் இடியென ஒரு செய்தி குட்டி.. குட்டிக்கெனன் நடந்தது. அங்குள்ள ஒவ்வொரு உறவு களையும் ஓடோடி விசாரித்தோம். தெரிந்தவர்களுக்கு குட்டி தெரியாதவர்களுக்கு ஆயிரம் விளக்கங்கள்... எமது நாட்டில் உள்ள உறவுகளுடன் தொடர்புகொண்டோம். அழுகை, அலறல் ஏதோ ஒன்று விளங்கி விட்டது.

குட்டி அவனுடன் போனகிழமை கதைத்தேன் ,நேற்றுத்தான் கதைத்தேன், எவ்வளவு சந்தோசமாய் கதைத்தான் சுகமாய் இருப்பதாகச் சொன்னான். எப்பவடா வருவாய்? கோயில் திருவிழாவும் வருகுது உன்னைப் பார்க்கவேணும்போல இருக்கு ராகு அண்ணா நாம் எல்லோரும் சகோதரர்மாதிரியா பழகினோம் நண்பர்கள் மாதிரியல்லவா பழகினோம் என்று கூறினானே.....!! ஐயோ அவன் குரலை எப்போது இனி நான் கேட்பேன்!! அவனுக்கு என்ன நடந்தது.....!

கடந்த ஆண்டுகளில் வந்துபோனவர்கள் குட்டி எவ்வளவு நல்ல பிள்ளை University இல் படிக்கிறான். நல்ல பண்புள்ளவன். வீட்டிற்கு சென்றபோது வெளிநாடுபற்றிய நிலைமைகளையும் , நமது தாய்நாடு பற்றிய நிலமைகளையும் விசாரிப்பான். பொது விடயங்கள் பற்றி எம்முடனும் அலசி ஆராய்வான் கோயிலில் பார்த்தோம் ஓடி ஓடி எல்லாவற்றையும் முன்நின்று செய்தான். நல்லாக ஆடுவான், பாடுவான், நடித்துக்காட்டுவான், எல்லோருட னும் சகசமாகப் பழகுவான், யார் என்ன கேட்டாலும் முகம் சுழிக்காமல் செய்துதருவான். இன்நாட்டு நடைமுறையளைச் சொல்லி வழிகாட்டினான். எங்கள் குடும்பத்தில் ஒரு நல்ல துடிப்பான ஆண்மகன் என நினைத்தோம்.... என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவருடங்களுக்கு முன் வந்தவர்கள் வட்டமுகம், நீண்டநாடி, சுருட்டைத்தலைமுடி, துரு துரு என்று ஓடித்திரிவான் அவனா.... ஐயோ!!! அவனுக்கு என்ன நடந்தது... வயது 23 ஆகிவிட்டதாம். University இல் படிக்கிறானாம். பெரியவனாகி விட்டானாம். எம்பியின் மகனாம் சறோசாவின் நான்காவது மகனாம் போட்டோவில் பார்த்தோம். இப்படி ஒரு மகனா.....? இங்கும் அவன்பேச்சுத்தான் நீங்கள் அவனுடன் வாழ கொடுத்து வைக்காத வர்கள். அவன் மானுடப்பிறவி இல்லாவிடில் உங்களுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு விதி வந்ததோ......?

இப்படியாக நாம் எமக்குத் தெரிந்தபடி அவனது பரிமானங்களை பலகோணங்களில் பார்த்தோம். எமக்குத் தெரியாதவற்றையும் இப்பொழுது தெரிந்துகொண்டோம். எமது நாட்டில் எமது குடும்பத்தில் தலவிருட்சம் ஒன்று சரிந்தது. அதன் எச்சங்கள் நீண்டுவளரும் அது மீண்டும் முளைக்கும் பயன்தரும்.

**தொலை தூர தொலைபேசியில் உதித்தவை**
**நாடுகடந்த உறவுகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமில்லை அழுங்குதலில்லை,
நடுங்குதலில்லை நாணுதலில்லை,
பாவமில்லை பதுங்குதலில்லை,
ஏது நேரினும் இடர்படமாட்டோம்,
அண்டஞ் சிதறினால் அஞ்சமாட்டோம்,
கடல்பொங்கி எழுந்தாற் கலங்கமாட்டோம்,
யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்,
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்...

(மகாகவி பாரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்



"எந் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் கிடைத்தற்கரிய செல்வம் கோபிநாத்தின் பிரிவுத்துயர்கேட்டு அன்றிலிருந்து இன்றுவரை ஓடோடி வந்தும், வெளிநாட்டில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமும் தந்திமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கள் ஆத்மசாந்திக்கிரிகைகளில் கலந்துகொண்டு மலர்வளையம் செலுத்தி அஞ்சலி செய்தவர்களாகிய Sports Sceince Unit University Of Jaffna மாணவர்கள், Dept Of Buldings Kilinochchi உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவைமன்ற மாவட்ட உத்தியோகத்தர்கள் மாவட்ட சம்மேளனம் உத்தியோகத்தர்கள், Director & Staffs Dept Of Buldings Northern Provincei உத்தியோகத்தர் கள், Uthayan Panimani உத்தியோகத்தர்கள், யா/வதிரிவடக்கு மெ.மி.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலை சமூகம், மரண அறிவித்தல், கண்ணீர் அஞ்சலிகளை, பத்திரிகையில் பிரசுரித்தவர்களாகிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகம், உதயன் நிர்வாகிகள், பணியாளர்கள். செய்தி கேட்டு தூரதேசம் இருந்து வந்த உத்தியோகத்தர்களுக்கும் சிங்கள நண்பர்கள் பெரியவர்கள் யாவரிற்கும்,

கண்ணீர் அஞ்சலிகளை பதிப்பித்தும், வெளியிட்டு வைத்த யா/விக்னேஸ்வரக் கல்லூரி மாணவர்கள் (A/L 2008), விரிவுரையாளர்கள் (விளையாட்டு விஞ்ஞான அலகு யாழ்.பல்கலைக்கழகம்), தேசிய இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர் மாவட்ட சம்மேளனம், திருவள்ளுவர் சனசமூகநிலையம், நியூ எக்சலன் கல்வி நிலையம், விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள் (யாழ்.பல்கலைக்கழகம்), N C T. Civil Engineerning 3 Year 2012 Jaffna, கலட்டி ஐக்கிய விளை யாட்டுக்கழகம், கிருஸ்ணா விளையாட்டுக்கழகம் (கரணவாய் தெற்கு), இமையாளன் மத்தி விளையாட்டுக்கழகம், முங்கோடை முருகன் ஆலய நிர்வாகசபை, Dipertment of Building Kilinochchi, Thasan Engineerning Service,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மறவன்புலோ இளைஞர்கழகம் மாத்தறை நண்பர்கள், Technical College 3 Year Civil Engineerning Student Vavuniya, முகிலன் சதீஸ் ரஜீப் ஜான் (நெடுந்தீவு நண்பர்கள்), கல்யாணி ஆசிரியர் குடும்பம், த.ஜெகேந்திரகுமார், T.கோபிந்தராஜ், தங்கத்துரை குடும்பம், சுதர்சன் நிருஷாந் சிவகுமரன் (நண்பர்கள்), பொபிமாமா ரவிமாமா குடும்பம், சிறீதரன் குடும்பம், ரட்ணநாதன் குடும்பம், ராஜ்குமார் குடும்பம், செல்வராணி மாமி நாகேஸ்வரி தோகன், சிறிமாமா குடும்பம், பாலா உஷா (கரவெட்டி மேற்கு நண்பர்கள்) அவர்களுக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும் எம் செல்வத்தை வைத்தியசாலையில் சேர்த்தவர்கள், வைத்தியர்கள் (Dr. Sivaraman) (பெயர்கூறத்தவறியவர் கள்) தாதிமார்கள் அனைவரிற்கும்

கடைசிவரை கூட இருந்து அழைத்துவந்த நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சடங்கு நிகழ்வதற்கு பந்தல், ஆசன,வாகன வசதிகளை வழங்கியவர்களுக்கும், உணவுகளை வழங்கிய உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் துயர்துடைத்தவர்கள் அனைவருக்கும் 45 ஆம் நாள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், கிரியைகளை சிறப்பித்த பிராணாச்சாரியாரிற்கும், நூலை அச்சிட்டு வெளியிட்ட மதி கலர்ஸ் பதிப்பகத்திற்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிசெய்தவர்கள் முக்கிய மாக நன்றி கூற தவறிய அனைவருக்கும் எம் குடும்பம் சார்ந்த நன்றி களை தெரிவிக்கின்றோம்.

நன்றி நன்றி நன்றி....

**கரவெட்டி தெற்கு**
**கரவெட்டி**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**




**தொகுப்பு**
**S.கோகிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org